தினகரன் நெல்லை மாநகர்
20.3.2018 • செவ்வாய்க்கிழமை 17

# பாளை கல்லூரிகளில் பட்டிமன்றம்






▶ அரியகுளம் ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி, பாளை. சதக்கத்துல்லா கல்லூரியில் பட்டிமன்றம் நடந்தது.

நெல்லை, மார்ச் 20: . அரியகுளம் ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரியில், தமிழ்த்துறை பொதிகை இலக்கிய மன்றம் சார்பில் பட்டிமன்றம் நடந்தது. உதவிப் பேராசிரியை உஷா வரவேற்றார். கல்லூரி முதல்வர் மலர்விழி தலைமை வகித்தார். கணிதவியல் துறை சிறப்பு விரிவுரையாளர் முருகலிங்கம், சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்தார். “இன்றைய தகவல் தொடர்புச் சாதனங்கள் அறிவின் எழுச்சியா? அழிவின் சின்னமா?” என்னும் தலைப்பில் பட்டிமன்றம் நடந்தது. வி.கே.புரம் பிரியன்ட் மெட்ரிக். பள்ளி தாளாளர் கண்ணன் நடுவராக பணியாற்றினார்.

‘அறிவின் எழுச்சியே’ என்ற அணியில் மாணவிகள் சுகீதா, கற்பகவள்ளி ஆகியோரும், ‘அழிவின் சின்னமே’ என்ற அணியில் மாணவிகள் பூர்ணா, வைத்தீஸ்வரி ஆகியோரும் பேசினர். தகவல் தொடர்பு சாதனங்கள் அறிவின் எழுச்சியே என நடுவர் தீர்ப்பளித்தார். தொடர்ந்து பொதிகை இலக்கிய மன்ற செயலர் மதுபாலா அறிக்கைவாசித்தார். துணைச் செயலர் சுமித்ரா நன்றி கூறினார்.